## 19.3 ஊராட்சி பகுதிகளில் மனைப்பிரிவு தொடர்பான ஆவணங்கள் பதிவுத்துறையில் பதிவு செய்தல் மற்றும் உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளிடம் தடையின்மைச் சான்று கோருதல் குறித்த தெளிவுரைகள்

---

ந.க.எண். 99780/2000/ஊ.அ.நி–4
நாள் 6.2.2001.

ஊரக வளர்ச்சி இயக்ககம்,
பனகல்கட்டிடம்,
சைதாப்பேட்டை,
சென்னை – 15.

**சுற்றறிக்கை**

பொருள்: தடையின்மை சான்று – ஊராட்சி பகுதிகளில் மனைப்பிரிவு தொடர்பான ஆவணங்கள் பதிவுத்துறையில் பதிவு செய்தல் – உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளிடம் தடையின்மைச் சான்று கோருதல் – பதிவேடு பராமரிப்பது.

பார்வை:
1. அரசு ஆணை (நிலை) எண். 150, வணிகவரித்துறை, நாள் 22.9.2000.
2. பதிவுத்துறை தலைவர், சென்னை ந.க.எண். 2708/இ1/95, நாள்22.9.2000.
3. இவ்வலுவக ந.க.எண். 99780/2000/ஊ.அ.நி–4, நாள் 4.1.2001.
4. பதிவுத்துறை தலைவர், சென்னை ந.க.எண். 2708/இ1/95, நாள் 29.1.2001 மற்றும் 2.2.2001.
5. இவ்வலுவலக ந.க.எண். 99780/2000/ஊ.அ.நி–4, நாள் 2.2.2001.

பார்வை 1ல் உள்ள அரசாணைப்படி, கிராம ஊராட்சிப்பகுதிகளில் மனைத்திட்ட உரிமையாளர் அல்லது மனைத்திட்டத்தை உருவாக்கியவரால் மனைத்திட்ட ஒப்புதல் பெறாத வீட்டுமனைகளை முதன் முறையாக பதிவு செய்யும்போது தடையின்மை சான்றினை சம்பந்தப்பட்ட ஊராட்சி செயல் அலுவலரால் வழங்குவது குறித்து பார்வை 5 ல் உள்ள இவ்வலுவலகத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது பற்றி அனைத்து ஊராட்சி தலைவர்களின் கவனத்திற்கும் கொண்டு செல்ல அறிவுறுத்தப்படுகிறது.

மேற்சொன்ன அரசாணைப்படி, தடையின்மைச் சான்று அளிக்கும் விவரங்களை இதற்கென தனியே ஒரு பதிவேடு ஆரம்பித்து சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியால் பராமரித்துவருதல் வேண்டும். இந்த பதிவேட்டில் இணைப்பில் உள்ள விவரங்களை உரிய முறையில் பதிவு செய்து கிராம ஊராட்சியால் பராமரிக்கப்பட வேண்டும்.

இந்த சுற்றறிக்கைகளின் நகலை அனைத்து கிராம ஊராட்சி தலைவர்களுக்கும், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஆகியோருக்கும் அனுப்பி வைக்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – 1.

**க.சண்முகம்**
ஊரக வளர்ச்சி இயக்குநர்

### இணைப்பு

### மனைப்பிரிவு தொடர்பாக பதிவுத் துறைக்கு வழங்கும் தடையில்லாச்சான்று பதிவேடு

கிராம ஊராட்சி பெயர்: ஆண்டு … 2001 முதல் ………

| வ. எண். | விண்ணப்பதாரர் பெயர், முகவரி மற்றும் மனு நாள் | மனையை விற்கும் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி | மனையின் பரப்பளவு | மனை அமைந்துள்ள சர்வே எண். | நிலத்தின் தன்மை (Category of Land) | எந்த சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தடையின்மை சான்று அளிக்கப் பட்டது | தடையின்மை சான்று அளிக்கப்பட்ட ஊராட்சி அலுவலக கோப்பு எண் மற்றும் நாள் | கிராம ஊராட்சி தலைவர் / ஊராட்சி ஒன்றிய ஆணையரின் சுருக்கொப்பம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | | | | | | | | |